# மூதூர் பிரதேச சபை

# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2015 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 25 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 12 ஆம் திகதி சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மூதூர் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா.377,000 தொகையான உழவு இயந்திர இழுவைப் பெட்டி ஐந்தொகையில் நடைமுறையல்லாச் சொத்தாக கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. இதனால் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்களிற்காகச் செலுத்தப்பட்ட ரூபா 493,845 தொகை முற்பணக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

1.3.3 பெறவேண்டிய கணக்குகள்

1984 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலத்திற்கு நிலுவையாகவுள்ள ரூபா.12,638,221 கூட்டு மொத்தத் தொகையான அரசிறைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக நிலுவையாகக் கணக்கிடப்பட்டு வருகின்றது.

1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகள் இன்மை.

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்கு இனம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| காணிகளும், கட்டடங்களும் | 32,900,660 | காணி உரிமைப்பத்திரம் |
| பொறித் தொகுதிகளும் இயந்திரங்களும் | 1,318,681 | நிலையான சொத்துப் பதிவேடுகள் |
| மோட்டார் வாகனம் | 28,916,570 | |
| தளபாடங்கள் | 1,765,800 | |

1.3.5 சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 134 (1) ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்களை இனம் கண்டு அவற்றின் ஆண்டுப் பெறுமதியை மதிப்பீடு செய்து வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 880 | காசு மற்றும் களஞ்சியம் தொடர்பாக நிர்வாக ரீதியாக பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட நான்கு உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக ஒழுங்கு விதியின் அத்தியாயம் X இன் விதி 193 | ஆண்டுக்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | மாகாண நிதி ஒழுங்கு விதியின் இலக்கம் 237 | வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 9,257 பெறுமதியான 06 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மோட்டார்வாகன போக்குவரத்துச் சட்டத்தின் பிரிவு 203 | சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 09 வாகனங்களுக்கு வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் செயற்பாடுகள் ரூபா 3,128,510 மீண்டு வரும் செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்ததுடன் அதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டின் செயற்பாடுகள் ரூபா 22,182,927 தொகையான செலவினத்திற்கு மிகையான வருமானத்தினை விளைவித்திருந்தது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவையாகவுள்ள வருமானம் என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | 2015 திசெம்பர் 31இல் நிலுவை மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 781,500 | 197,587 | 5,233,731 |
| வாடகை | 8,297,126 | 7,842,303 | 6,486,984 |
| சேவைகளுக்கான கட்டணம் | 8,385,000 | 1,418,544 | 6,976,510 |
| அரசிறை வருமானம் | 750,000 | 630,500 | 309,491 |

#### 2.2.2 இறைச்சிக் கடை குத்தகை வருமானம்

மீளாய்வாண்டிற்கான இறைச்சிக் கடை குத்தகை நிலுவை ரூபா 2,701,919 தொகை அறவீடு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 13 மோட்டார் வாகனங்கள் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால்

பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்;ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு 2011ஆம் ஆண்டிற்கு முன்னர் செலுத்த வேண்டிய ரூபா 48,000 தொகையை செலுத்துவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் 07 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா. 133,242 தொகையான நிலுவைக் கடனை கடந்த 08 ஆண்டுகளாக அவர்களிடம் இருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை அரசாங்கத்தின் தாபன விதிக்கோவை அத்தியாயம் XXIV பிரிவு 1.6 இற்கு அமைய கடன் பெற்ற உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் பெற்று செல்கையில் அக்கடனின் விபரங்களை இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலகத்துக்கு அனுப்பி அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.133,242 தொகையான கடன் கடந்த 08 ஆண்டுகளாக அறவீடு செய்யப்படாது நிலுவையாகக் காணப்படுகின்றன.

(உ) IAI/2002/02 ஆம் இலக்க 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் கணனிகளின் உதிரிப்பாகங்கள், கணனி மென் பொருட்கள் என்பவற்றை பதிவதற்கான தனியான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 750 இன் பிரகாரம் சகல அரச வாகனங்களிலும் அரச இலச்சினை பொறிக்கப்பட வேண்டும். எனினும் சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 11 வாகனங்களுக்கு அரச இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாமல் உள்ள சபையின் சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான நான்கு உழவு இயந்திரங்கள் திருத்தம் செய்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாது 03 தொடக்கம் 08 வருட காலமாக பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

4. மனிதவள முகாமைத்துவம்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளவாறான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| நிறைவேற்றுனர் | 01 | -- | 01 |
| உதவியாளர்கள் | 29 | 26 | 03 |
| சிற்றூழியர்கள் | 76 | 66 | 10 |

கடந்த 05 வருட காலமாக முகாமைத்துவ சேவை அதி விசேட தரம் 1 இற்கான பதவி ஒன்று வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் அவ் வெற்றிடத்திற்கு நிரந்தரமாக ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பதில் கடமை அடிப்படையில் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

---

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான முகாமைத்துவம்
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு